ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

ஸ்வர்க்கம் முதலிய மேலுலகத்தில் வஸிப்பவர் பெரும்பாலும் ஸுகத்தையே அனுபவிக்கிறார்களென்றும், நரகம் முதலிய தாழ்ந்தவிடத்திற் சென்றவர் துக்கத்தையே அடைந்து கஷ்டப்படுகிறார்கள் என்றும் பிரமாணநூல்கள் கூறுகின்றன. மத்தியமலோகமாகிய மானிடஉலகத்தில் ஜனித்த பிரஜைகள் ஆயுள்முழுவதும் ஸுகத்தையே அனுபவித்தார்கள் என்றாவது அல்லது துக்கத்தையே அனுபவித்தார்களென்றாவது சொல்லுவதற்கில்லை. இரண்டையும் கலந்துகலந்துதான் அனுபவிப்பதாகக் காணப்படுகின்றது. காரணமின்றி இவ்வாறு நேர இடமில்லை. சுபாசுப கர்மங்கள் மிச்ரமாயி (கலந்தி) ருப்பதுதான் இதற்குக் காரணமென்று சுருதியில் காணப்படுகின்றது. அத்தகைய கர்மங்களின் சுபாசுப பலன்களை நவக்கிரஹங்கள் ஸூசிப்பிக்கின்றனவாம். இதற்காகவே சோதிடநூலின் ஓர் பிரிவான ஹோராஸ்கந்தத்தில் அந்த நவக்கிரஹங்களுள் சில கிரஹங்கள் சுபர்களென்றும், சில கிரஹங்கள் குரூரங்களென்றும், சுபகிரஹங்களின் தசைகளில் சுபபலனாகிய ஸுகமும், குரூரக்கிரஹங்களின் தசைகளில் அசுபபலனாகிய துக்கமும் நேருமென்றும் நிரூபிக்கப்படுகின்றது. அதாவது—குஜசனிகள் மிகப்பாபிகளென்றும், அவர்களுடைய தசையில், புத்தர், சமணர், சாக்கியர் முதலிய துர்மதஸ்தர்களின் மதத்தில் பற்றுதலும், அம்மதநூல்களே, சிறந்த அறநூல்களென்று நினைத்து அவைகளிற் கூறியபடி நடப்பதே நலமென்றொழுகலும் அதர்மபலனை அனுபவிக்க நிமித்தமாக நேருமென்றும் ஹோரையில் கூறப்படுகின்றது. ஆகவே புறமதப்பற்று பாபஹேதுவென்றேற்படுகின்றது. அன்றியும் குரு சுக்கிராதிகள் சுபர்களென்றும் அவர்களுடைய தசைகளில் வைதிகமதப்பற்றுதலும், வேதசாஸ்திரபுராணாதிகளே பெரிய பிரமாணமென்றொழுகலும் தர்மபலனையனுபவிக்க நிமித்தமாக நேருமென்றும் ஆங்கு கூறப்படுகின்றது. ஆகவே வைதிகமதப்பற்று புண்ணியஹேதுவென்று ஏற்படுகின்றது. அப்படியிருக்கையில் தற்காலத்திய சிலர் வேதசாஸ்திரபுராணாதிகளைப் பிரமாணமில்லையென்றும், ஒருவாறு சீர்திருத்தப்பட்டால் பிரமாணமாகலாம் என்றும், சீர்திருத்தவேண்டிய முறை பலவிதமாகுமென்றும் பலவாறாகப் பேசுகின்றனர். இதெல்லாம் சோதிடநூல்படி அதர்மஹேதுவென்று தெரிகிறது. வைத்தியசாஸ்திரமுறைப்படி பார்த்தாலும் வேதாதிகளைப் பிரமாணமில்லையென நினைப்பதும் தேவர்களையும் பிராம்மணர்களையும் ஏளனம் செய்வதும் பாபமென்றும், அதனால் ரோகங்கள் பலவாறாகப் பரவிப்பீடிக்குமென்றும் தெரிகிறது. ஸர்வஜனங்களுக்கும் பொதுவாயிருக்கின்ற சோதிடவைத்தியநூல்களில் கூறியதையே வைதிகாது பிரமாணக்கிரந்தமும் கூறுமாயின் அதுதான் ஸரியான ஸித்தாந்தம் என்று எவருக்குத்தான் தெரியாத விஷயமிது? ஆகையால் வைதிகர் உலகநன்மையைக் கவனிக்காமல் குருட்டுநம்பிக்கையராக எதையோ சொல்லுகிறாரென்று நினைக்காமல் பிரமாணத்தால் ஸித்தித்த உண்மையையே உரைக்கின்றார் என நம்பி யாவரும் நலம் பெறுவாராக.

பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

சுக்ல-ஸ்ரீ மாசி-மீ ௧௯௨

ப்ரார்த்திக்கப்படுவது பிந்தித்தான் கிடைக்கும்.

பின்னிட்டுக் கிடைக்கவேண்டியதாக நினைக்கப்படுவதுதான் ப்ரார்த்திக்கப்படும். தற்காலம் ஸித்தமாயிருப்பதை எவரும் ப்ரார்த்திப்பதில்லை. ஸித்தமாயுள்ளது கைவசமாயிருப்பதுபற்றியே ப்ரார்த்திக்கக்கூடியதாகாது. தன் கைவசத்தில் 10-ரூபாயை வைத்துக் கொண்டிருப்பவன் அதே 10-ரூபாய் தனக்குக் கிடைக்கவேணுமென்று ப்ரார்த்திக்கமாட்டானல்லவா? ப்ரார்த்திக்கப்படுமாயின் அது பின்னிட்டுக் கிடைக்கவேண்டியதாகத்தானிருக்கும். இதுபோலவே விவாஹமந்திரத்தில் அந்த மணப்பெண்ணிடம் ப்ரார்த்திக்கப்படும் குணங்களெல்லாம் பின்னிட்டுக் கிடைக்கவேண்டியதையுத்தேசித்தேயன்றி வேறல்ல. மணப்பெண் புருஷன்வீடு வந்ததும் புருஷன்வீட்டிலிருக்கும் பந்துக்களுக்குத் தக்கபடி நடந்துகொள்ளும் திறமையும், மாமனார், மாமியார், மைத்துனன், நாத்தனார் முதலியவர்களுக்கெல்லாம் ராக்ஞியாயிருக்கும் தன்மையும், இவைபோன்ற மற்ற குணங்களும் சில மந்திரங்களில் ப்ரார்த்திக்கப்படுவது இளம்பிராயத்தில் வரும் பெண்ணுக்குப் பின்னிட்டுக் கிடைக்கவேண்டியதாகக்கூறினால் பொருத்தமுடையதாகும். இதனால் ப்ரௌடவயது வருவதற்குமுந்தி செய்யப்படும் விவாஹம்தான் மந்திரங்களாலும் ஸம்மதிக்கப்படுகின்றது. இந்த மந்திரங்களில் ப்ரார்த்திக்கப்படும் குணங்களெல்லாம் மணப்பெண்ணிடம் விவாஹகாலத்திலேயே ஸித்தமாயிருக்குமாயின் ப்ரார்த்திப்பது வீணாகும். ஆகையால் ப்ரௌடையானவள் விவாஹத்திற்குரியவளல்ல. இப்படி சாஸ்திரஸித்தாந்தம் நியாயத்திற்கு ஒத்ததாயிருக்க தற்காலத்தில் சிலர் பிடிவாதமாக மந்திரலிங்கங்களுக்கும் வேறு தாத்பர்யங்கற்பித்து ப்ரௌடாவிவாஹத்தைச் சாஸ்திரீயமென சாதிக்கமுயலுவது தர்மவிபரீதமான ஸாஹஸமேயாகும். தர்மவிபரீதமாக நடப்பது தார்மிகர்கட்கழகன்று.

திருஷ்டமான சில பிரயோஜனத்திற்காக தர்மத்தைத் தவறிநடப்பதும் சரியன்று. விவாஹகார்யமென்பது கேவல திருஷ்டப் பிரயோஜனத்திற்காக ஏற்பட்ட காரியமில்லை. தலைமுறைதலைமுறையாய்த் தொடர்ந்துவரும் அதிருஷ்டத்திற்காகவென்றே விவாஹம் நடத்தப்படுவதாக நமது சாஸ்திரஸித்தாந்தம். விவாஹம் செய்துகொண்டவன் கிரஹஸ்தாசிரமியென்றும், அவனால் தேவர்களுக்கும் பிதிருக்களுக்கும் செய்யவேண்டிய சடங்குகள் பலவுளவென்றும், அவைகளைச் செய்யாமல் சிற்றின்பத்திலேயே சாய்ந்துகிடப்பது பாபத்திலும் பாபமென்றும் அதே வேதமந்திரம் கூறுகின்றது. விவாஹம் செய்யப்பட்ட பெண் பூர்வபுண்ய வசத்தால் புனிதனான புதல்வனைப்பெறுவாளாகில் அந்தப் புத்ராத்தினம் இஹத்தில்போல் பரத்திலும் ஸர்வகார்யங்களிலும் ஸாதகமாயிருப்பானென்று ஸம்பிரத்திகர்மாவினால் சுருதி போதிக்கின்றது. பாக்கியமின்மையால் புதல்வனைப் பெறுவிடில் தனக்குமுன் இறந்த கணவனுக்கு இஹத்திலின்பமாயிருந்ததுபோல் பரத்திலும் பதிவிரதாதர்மத்தால் பிரியத்தையே செய்வாள். நம்முடைய வைதிகமதத்தில் ஒவ்வொரு வைதிககர்மமும் பரலோகத்தைப் பிரதானமாகக்கொண்டே பிரவிருத்தித்திருக்கின்றது. நெடுநாளைக்கு நீடித்திருக்கும் சுகத்தையும், அதன் ஸாதனத்தையும் கெவனிக்காமல் தற்காலத்தில் தோன்றியழியும் ஸ்வல்பஸுகத்திற்காக அரிதாகக் கிடைத்த மானிடப்பிறவியை முழுவதும் பாழாக்கிவிடுவது புத்திமான் செய்யும் வேலையாகாது. அல்பஸுகத்திற்கு ஆசைப்பட்டு அளவற்ற துக்கத்திற்காளாவது அறிஞர்க்கழகல்ல. பால்யத்தில் பாடுபட்டுப்படித்துப் பணத்தைத் தேடிவிட்டால் பின்னிட்டுப் பலகாலம் ஸுகித்திருக்கக் கருதுவதுபோலவே இஹத்தில் பிரயாஸப்பட்டுப் புண்ணியத்தைப் பெருக்கிக்கொண்டால் பரலோகத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பரமஸுகத்தைப் பெறலாமென்று பெரியோர்கள் கூறின ப்ராமாணிகஸித்தாந்தத்தைப் பெரிதாக பாவித்து, பாமரர் போகும் வழியிற் போகாமல் யாவரும் புண்ணியத்தையே செய்து பாக்கியவான்களாகிப் போனந்தம் பெறுவாராக.

சுபம் !

பத்திராதிபர்.

இது ஒரு பயமுறுத்தலா.

30-1-30 வியாழக்கிழமை மித்திரனில் கும்பகோணம் வக்கீல் ஸ்ரீமான் ஜி. வி. வெங்கடராமய்யரென்பார் காங்கிரஸ் மீது கோபமேன். ஸனாதனதர்மிகளுக்கு வேண்டுகோள் என்று பெயர் கொடுத்துக்கொண்டு ஸனாதனதர்மிகளுக்கு எச்சரிக்கை செய்கிறேன் என்றும் ஆரம்பித்து இவர்கள் தேசியகாங்கிரஸ் மஹாசபைக்கு விரோதமாக பிரசாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள் என்று கோபிக்கிறார். காங்கிரஸ் இயக்கத் தலைவர்கள் வேதங்களுக்கும், சாஸ்திரங்களுக்கும் விரோதமாக இருப்பதாகவும் ஸனாதனதர்மிகளுக்கு எதிராக இருப்பதாகவும் ஆகவே அவர்களை எதிர்த்துப் போராடவேண்டுமென்று எண்ணுவதாயும் வக்கீல் சொல்லுகிறார். ஸனாதனதர்மிகளின் லக்ஷ்யத்தை அவர்கள் ஆதரிக்கவில்லையென்பது உண்மைதான் என்றும் ஏற்றுக்கொள்கிறார். இனி ஸனாதனதர்மிகள் யாது செய்வார்கள். வக்கீல் அவர்களும் ஸனாதனதர்மம் என்று சொல்லிக்கொள்கிறார். இவ்விஷயத்தில் நடக்கவேண்டியதற்கு வழிகூறுவதும் அவரது பொறுப்புதான். ஆனால் மேலே அவர்போவதைப் பார்த்தால் மட்டிலும் அவ்விதம் நினைக்க இடமில்லைபோல் தோன்றுகிறது. ஏனெனில் இவர் தனக்கு காங்கிரஸ் அபிமானத்தையே அதிகரித்துக்காட்டுகிறார். சென்னை மாஹாணகாங்கிரஸ்கமிட்டி தங்கள்மீது தவறில்லையென்பதைக்காட்டிவிட்டதைக் கவனிக்கவேண்டுமாம். நாமும் அதைக் கவனிப்போம். அதனால் நமக்கு என்ன பலன் கிடைக்கும். தலைவர்களான ஆசார சீர்திருத்தக்காரர்கள் காங்கிரஸ்ஸில் இதற்கு அவகாசம் கொடுத்தார்களா. மதவிஷயத்தில் தலையிடாமலிருக்கும்படி லாகூர்காங்கிரஸ்ஸுக்கு முன்னமேயே பலர் கூக்குரலிட்டது காதிலாவது விழுந்ததா? சென்னைமாஹாண காங்கிரஸ்கமிட்டிதான் நமக்கு என்ன அபயம் கொடுத்துவிட்டது. காந்தி நேரு முதலிய பிரபல தலைவர்களோ நேர்விரோதமாய் இருக்கும்போது மற்ற யாரால்தான் என்ன செய்யமுடியும். இப்போது லாகூர்காங்கிரஸ்ஸில் செய்ததீர்மானம் எல்லோரும் சேர்ந்து ஒப்பி செய்ததா? ஏதோர் தலைவர் பேசினதும் அவரிடத்துள்ள மதிப்பினால் பலர் கைதூக்கியதாற் காங்கிரஸ் ஆக்ஞையென்று வெளி

யாயிருக்கிறது. இப்போதும் கஷ்டத்துடன் தான் ஒவ்வொரு மெம்பரும் தன் தன் பதவியை இழக்குமுன் தன் அபிப்பிராயம் ஒப்பவில்லையென்றாலும் காங்கிரஸ் ஆக்ஞைக்காக விலகுகிறேன் என்று கூறுகின்றனர். ஆகவேகாங்கிரஸ்பேரில் கோபமேன்என்று அய்யாவர்கள் தலையங்கமிட்டதற்கு அர்த்தம் யாதோ. இனி இவர் இன்னொன்று வெகு கோபத்துடன் கூறுகிரவார்த்தைஇது.

காங்கிரஸ் ஸ்தாபனங்களை எதிர்த்துப்போராடியதால் நமது லக்ஷ்யம் நிறைவேறிவிடுமா ? ஒருக்காலும் நிறைவேறாது. காங் கிரஸ்கொள்கை உடையவர்கள் இதனால் நம்மிடம் அனுதாபம் காட்டாது விலகவும் நேரிடும் என்கிறார். இதற்கு நான் முதலில் கொடுத்தபதிலேபோதும். இனிப்புதிதாய் காங்கிரஸ்கொள்கை உடையவர்களும் விலகுவார்களென்றால் நமது அய்யாவர்கள் விலகலாம். அப்படியானால் அவர் ஸனாதனி என்று சொல்ல நேராது. பெரிய தலைவர்களே விரோதமாயிருக்கும்போது இத்தகை யோர் விரோதம் பெரிதல்லவென்றே ஸனாதனதர்மிகள் எண்ணக் கூடும். ஸனாதனிகள் தேசாபிவிருத்திக்குத் தடையாய் இருப்பது கூடாதென்கிறார்.

लोकास्समस्तास्सुखिनो भवन्तु, काले वर्षतु पर्जन्यः पृथिवीसस्य-शालिनी । देशोयं क्षोभरहितः ॥

எல்லா உலகமும் சுகமடையட்டும், சரியான காலங்களில் மழை பொழியட்டும், பூமி பயிர்களால் செழிக்கட்டும், இந்த தேசம் கலக்கமடையாமலிருக்கட்டும் என்று அனுதினமும் ஸனாதனதர்மி கள்தான் பிரார்த்திக்கிறார்கள். இனி ஸனாதனதர்மிகள் சட்ட ஸபைக்கு இப்போது முன்வருவது காங்கிரஸுக்கு விரோதமாதலால் அது நியாயமில்லையென்று உபதேசிக்கிறார். இந்த வார்த்தை எந்தமட்டும் நியாயமோ தெரியவில்லை. இப்போது காங்கிரஸ் காரர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப் பல கோஷ்டியினர் ஏற்றுத்தான் இருக்கிறார்கள். அதற்காக காங்கிரஸ் ஆக்ஞைப் படியே நாமும் நடக்கவேண்டுமென்று அவர்கள் எல்லோரும் சட்டஸபையைக் காலிசெய்துவிட்டனரோ? அப்படிச்செய்யாமற் பலர் இருப்பதனாலும் மாளவ்யா முதலிய அவர்கள் தேசமுன் னேற்றத்தை விரும்பாதவர்கள் என்று சொல்லிவிடுவதா? இன் னும் பலர் காலிஸ்தானங்களுக்கு நிற்பதால் நிற்பவர்கள் யாவரும்

தேசமுன்னேற்றத்திற்கு தடைசெய்பவர்களென்று அய்யாவர்
கள் அபிப்பிராயப்படுவாரா? இல்லையேல் ஸனாதனதர்மிகளைமட்டி
லும் கோபித்துக்கொள்வானேன்? காங்கிரஸ்காரர்கள் ஸர்வகக்ஷி
மகாநாட்டுக்குப் போகப்போவதில்லையாகையால் அது சந்திரமதி
இல்லாத அரிச்சந்திரநாடகம். அதனால் காங்கிரஸ்காரர்களுக்கு
விரோதமாய் ஸனாதனதர்மிகள் ஒன்றும் செய்யக்கூடாதென்
கிறார். அது எந்த நாடகமாய் வேண்டுமானாலும் ஆகட்டும். இப்
போது ஸனாதனதர்மிகள் நாடகம் பார்த்துக் களிக்க நிற்கவில்லை.
ஸர்வசொத்தும் பறிமுதலாகும்போது ஸந்தோஷம் ஏது? பிறகு
சாரதாசட்டம் தொலைய வழிதேடவேண்டுவது அவசியமென்று
மட்டிலும் சொல்லிக்கொள்கிறார். அதற்கு யுக்தியையே சொல்ல
வில்லை. இப்போது கவர்ன்மெண்டையே ஸ்தம்பிக்கச்செய்து
நாம் ஸ்வயராஜ்யக்கொடியைப் பறக்கவிட்டுக் கூடியசீக்கிரம் சுய
ராஜ்யத்தைப் பெற்றுவிடுவோமென்று கர்ஜிக்கும் காங்கிரஸ்காரர்
கள் சாரதாசட்டத்தை நல்வரவுகூறி மேல்மாடியில் வைத்து
அதை ஓட்டிவரப்போகும் வேதசாஸ்திரவிரோதமான பில்களையும்
சட்டமாக்கி அவைகள் உலகத்தில் பெருகப்பெருகத்தான் தேச
க்ஷேமம் என்று கருதிக்கொண்டிருக்கும்போது நம் முயற்சியை
இனி எந்த தேசத்தில் செய்வது? நமக்காக ஓர் பத்திரிகை ஆரம்
பிக்கிறதென்று ஸனாதனதர்மிகள் சொல்லிக்கொள்வதும் தவறாம்.
போகும்வழியெல்லாம் தடுக்கிறார் புதுயுக்தியும் சொல்லாமல் ஸனா
தனதர்மிகளைபயமுறுத்தவும்செய்கிறார். இவ்வளவால்இனிஸனாதன
தர்மிகள் காங்கிரஸ்ஸை எதிர்த்துதான் ஆகவேண்டுமென்று நான்
கூறுவதாய் எண்ணவேண்டாம். காங்கிரஸ்காரர்களால் சாரதாசட்
டம் நிறைவேறினவுடன் நானும் காங்கிரஸ்ஸில் ஸனாதனதர்மாபி
மானமுள்ளவர்களைச் சேராமல்விலக்கிவிடும்படி பிரசாரம் செய்ய
வேண்டுமென்று அபிப்பிராயம் கொண்டேன். என்னை அனு
ஸரித்தவர்களும் பலர். இதுஸமயம் ஸ்ரீ காமகோடி பீடாதிபதி
களின் திவ்யசரணஸேவைக்குச் சென்றபோது இதுவிஷயமான
பிரஸ்தாபம் செய்தேன். அப்போது மதுரையிலுள்ளவர்களின்
அபிப்பிராயம் யாதென திருவாய் மலர்ந்தபொழுது காங்கிரஸ்ஸை
விட்டு எல்லோரையும் விலகும்படி பிரசாரம் செய்யவேண்டியது
என்றகொள்கைதான் பலருடையதென்றேன். அதற்கு ஸ்ரீசரணம்
உத்தரவிட்ட திருவாக்கு இது. காங்கிரஸ்ஸை நாம் விலக்கக்

கூடாது. அது ஒரு தனிக்கூட்டத்தாரது ஸொந்தமல்ல. அதில் நாம் சேராமலிருந்ததனுல் இப்போதுள்ளவர்கள் மேம்பட்டு அவர்கள் வாக்குப்படி முடிக்கிறுர்கள். நாமெல்லோரும் போய் நமது வாக்கையே அதிகவாக்காகச்செய்ய வழி தேடுங்களென்று அருளினுர்கள். ஆகவே அவ்விதம் பிரசாரம் செய்வதற்கு ஆவல் கொண்டிருக்கிறேமாயினும் சமயம் சிக்கலாய் நேர்ந்துகொண்டிருப்பதால் இன்னது இப்போது செய்வதென்று தோன்றுமல் மன்னுடும்போது நம் அய்யாவர்கள் ஸனுதனதர்மி என்று சொல்லிக்கொண்டு அவர்களைப் பயமுறுத்துகிறுர். உண்மையில் காங்கிரஸ் தலைவர்கள் உலகத்திற்குக் கெடுதலை விளைவிக்காமல் சீக்கிரம் ஸ்வயராஜ்யமடைய வழி தேடவேண்டுமென்று முயன்றுல் செல்வாக்குள்ள அவர்கள் முதலில் இனி மதத்தில் நடுநிலைமை வகிப்போம். சாரதாசட்டத்தையும் அதை அடுத்துவரும் மதவிஷய சட்டங்களையும் ரத்துசெய்ய முயல்வோம் என்று சொல்லிவிட்டால் உலகில் யாவரும் காங்கிரஸ்காரர்கள்தான். உடனே அடுத்த நிமிஷம் ஸ்வயராஜ்பமென்பது சிரமமின்றிக் கைகூடிவிடும். இது இல்லாவிடில் சுயராஜ்யமடைவதற்குமுன் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவிக்கநேரிடுமென்பதை தீர்க்காலோசனைக்காரர்கள் நன்கு ஆராய்ந்துபார்க்கட்டும். இதையெல்லாம் ஆராயாது அய்யர் பயமுறுத்துவதுதான் பயமாயிருக்கிறது, இருக்கட்டும். இது போதாமல் 1—2—30 சனிக்கிழமை மித்திரனில் இவர்போன்ற ஓர் அபிமானி இந்தியா சட்டஸபையில் தஞ்ஜைஜில்லா பிரதிநிதி என்று தலைப்பெழுதி தஞ்சைஜில்லா பில்லூர் மிராசுதார் பி. எஸ். ஸ்ரீனிவாஸய்யர் என்பவரால் இந்தியா சட்டஸபையில் A. ரெங்கஸாமி அய்யங்கார் அவர்கள் தன் ஸ்தானத்தைக் காலிசெய்துவிட்டபடியால் அவர் மிக உபகாரம் செய்தவர். ஆகையால் மறுபடியும் அவரையே நிற்கும்படி செய்யவேண்டுமென்று ஓர் ஸபை கூடி தீர்மானம் செய்யவேண்டும் என்றும்மட்டில் போட்டு நிறுத்தியிருந்தால் நலமாய் இருக்கும். அவ்விதமில்லாமல் தன் மனதிலுள்ள விசேஷங்களை அங்கு வெளியிட்டது யாது காரணமோ அறிகிலேன். அவர் கூறுவது இது—ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் ஸ்தானத்திற்கு பல அபேக்ஷகர்கள் நிற்கிறதாய்ப் பத்திரிகைகள்மூலம் வெளியாகிறது என்கிறுர். இத்தோடும் நின்றிருக்கலாம். அதற்குமேல் தாவிப்பிடித்திருப்பதைப் பாருங்கள்,

சனாதனப்பிரதிநிதிகளுக்காக திருச்சி ராஜாபகதூர் கிருஷ்ணமாசாரியாரவர்கள் முக்கியமாய் சாரதாசட்டத்தைக் கண்டித்தும் ஸநாதனதர்மத்தைக் காப்பாற்றுவார் என்பதாக இவருக்காகப் பிரயாஸைப்படும் சில வர்ணாசிரமதர்மிகள் சொல்லிவருகிறார்கள். ஜனங்களுக்கு மதம் முக்கியம்தான், மதத்திற்கு எவ்விதக்கெடுதலும் வாவில்லை, சாரதாசட்டத்தால் எவ்வித ஆபத்தும் வாவில்லை என்று அதற்காக வேறு பிரதிநிதியைக் கூடியசீக்கிரம் தேர்ந்தெடுக்க ஓர் கூட்டம் கூட்டவேண்டுமென்று முடித்துவிட்டார். இதில் சற்று ஊன்றி கவனித்தால் நம் அய்யாவர்களுக்கு மதவிஷயத்திலுள்ள மனப்பான்மை யாவருக்கும் எளிதில் விளங்கும். பாருங்கள். அநேக பிரதிநிதிகள் நிற்பதில் கிருஷ்ணமாசார்யார் நிற்பதில் அய்யருக்கு வெறுப்பா? சாரதாசட்டத்தில் அபிமானமா? ஷைசட்டத்தைப் பிரயாஸைப்பட்டு சட்டமாக்க உதவியாய்நின்ற அய்யங்காரிடம் பக்தியா? மதத்திற்கு யாதொரு கெடுதலும்வந்துவிடவில்லை என்கிறாரே. மதம் என்ன ஸ்வரூபமுடையது. சாரதா சட்டம் மதத்திற்குத் தீங்கை விளைவிக்கவில்லை என்றால் எந்த மதத்திற்கென்று இவர் நினைத்துக் கூறுகிறார். உண்மையான இந்துமதம் எந்த வரம்பில் நிற்கிறது? எது போனால் மதம் போய்விடும் என்று யாரையாவது சாமான்யமாயாவது கேட்டுத் தெரிந்துகொண்டிருந்தால் இவர் இவ்விதம் எழுத ஒருக்காலும் துணியவேமாட்டார். உண்மையான மதஸ்வரூபம் தெரியாததும் எல்லைகடந்த காங்கிரஸ் பக்தியும்தான் இவ்விதமெழுதச்செய்ததே தவிர வேறல்லவென்பது தெள்ளென விளங்குகிறது.

(தொடரும்) M. N. சுப்பிரமணியசாஸ்திரி,

மதுரை.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.

லிருந்து அங்கிரஸ் முதலிய மஹரிஷிகளைவிட மனுவானவர் மிக நவீனரென்று சொல்லப்போகின்ற மனுவசனப்படி புலப்படுவதால், இம்மனு ஸ்மிருதியும், மற்றவர்களின் ஸ்மிருதியைவிட நவீனமென்று ஏன் சொல்லக்கூடாது? மனுஸ்மிருதி இரண்டாமத்தியாயத்தில் "ஆங்கிரஸ் என்ற மஹரிஷியானவர் அதிக வயதுள்ள அங்கிரஸ்ஸென்றத் தமது தகப்பனுருக்கு வேதாத்தியயனம் செய்வித்தா"ரென்ற வசனத்தால், ஆங்கிரஸர், அங்கிரஸ் என்றத் தகப்பனுருக்கு வேதாத்தியயனம் செய்வித்ததாக, ஆங்கிரஸரின் சரித்திரத்தை அனுவாதம் செய்திருப்பதால் அங்கிரஸ் என்றவரின் புத்திரனுகவிருக்கும் ஆங்கிரஸருடைய காலத்தைக் காட்டிலும், அவருடைய சரித்திரங்களை அனுவாதம் செய்யும் மனுவின் காலம் பிந்தியதென்று ஏற்படுமன்றோ? ஆகவே மனு ஸ்மிருதி மிகப்பிராசீனமென்று நீங்கள் ஊஹித்துக்கொள்வதற்கு அவகாசம் சிறிதுமில்லையென்பது ஸித்தம். அன்றியும், மனுஸ்மிருதி பத்தாவது அத்தியாயத்தில், ஆபத்தர்ம பிரகாணத்தில், வாமதேவர், பாரத்வாஜர், விசுவாமித்திரர், என்ற மஹரிஷிகள் நாய் மாம்ஸத்தையும், கோ மாம்ஸத்தையும், ஆபத்துக்காலத்தில் சாப்பிட்டார்கள்" என்று வாமதேவர் முதலியவர்களின் சரித்திரத்தை மனு உதாஹரணமாக எடுத்துக்காட்டியிருக்கின்றார். மனுஸ்மிருதி மிகப்பிராசீனமென்று சொல்பவர்களுக்கு இது பொருத்தம் ஆகமாட்டாதல்லவா? வாமதேவர் முதலிய மஹரிஷிகளுக்கும் அவர்களுடைய ஸ்மிருதிகளுக்கும் முந்தினதாயிருக்கும் மனுஸ்மிருதியில் பின்காலத்தியவர்களாகவிருக்கும் வாமதேவர் முதலியவர்களின் சரித்திரத்தை எப்படி அனுவாதம் செய்யமுடியும். ஸ்மிருதிக்கர்த்தாக்களாக இருக்கும், வாமதேவர் முதலிய மஹரிஷிகளைவிட மனுஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கும், வாமதேவர் முதலியவர்கள் வேறனவர்கள் என்றுதான் கொள்ளவேண்டும். ஒரே நாமதேயத்துடன் இரண்டு மஹரிகளிருக்கலாமன்றோ-என்பதற்கு இடமில்லை.

இவ்வித சம்சயத்தை விலக்குவதற்காகவே வாமதேவர்முதலிய மஹரிஷிகளின் சரித்திரத்தை அனுவதிக்கும் மனுவசனத்தில் "தர்மாதர்மவிசக்ஷண"ரென்றொரு விசேஷணம் அம்மஹரிஷிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய விசேஷணத்தால், ஸ்மிருதிகர்த்தாக்களாக இருக்கும் வாமதேவர் முதலிய

மஹரிஷிகளையே, மனு அனுவாதம் செய்திருப்பதாகப் புலப்படு கின்றதேயன்றி வேறல்ல. "வி" என்ற உபசர்க்கத்துடன்கூடிய சக்ஷி தாதுவிலிருந்து நிஷ்பன்னமாகிய விசக்ஷணரென்றபதத்தி ற்கு, வியாக்யானம்செய்தவரென்றுபொருள்படும் ஆகவே "தர்மா தர்ம விசக்ஷணரெ"ன்ற சப்தத்திற்கு "தர்மாதர்மங்களை வியா க்யானம் செய்தவரெ"ன்று அர்த்தமாகும் இவ்வர்த்தத்திலேயே ஈசாவாஸ்யோபநிஷத்திலும் இப்பதமானது பிரயோகம் பண்ணப் பட்டிருக்கின்றது. அதாவது "வேதத்துக்கு விரிவுரையாசிரியர் கள்" என்று அதன் உண்மைப்பொருள். வேதத்துக்கு உரை யாசிரியர்களென்றால் ஸ்மிருதிகர்த்தாக்கள் என்றுதானர்த்தம். இதனாலேயே வாமதேவர் முதலிய மகரிஷிகளின் ஸ்மிருதியைக் காட்டிலும் அவர்களை ஸ்மிருதிகர்த்தாவாகத் தெரிவிக்கும் மனு ஸ்மிருதி மிகவும் நவீனமென்ற விஷயம் நன்றாய் விளங்குகின்ற தல்லவா? ஆகையால் ஸ்மிருதிகளுக்குள் பிராசீன நவீனபேதத் தைக் கற்பிப்பது ஸாத்தியமில்லை. ஆகவே அது துர்வாஸனா மூலந்தான் என்பது நிச்சயம்.

தவிர மற்ற ஸ்மிருதிகளைவிட மனுஸ்மிருதி மிகப் பிராசீன மென்றே ஸித்திக்கட்டும். ஆனால் மனுவானவர் மனுகாலத்தில் இருக்கும் தர்மானுஷ்டான க்ரமங்களைத்தான் ஸ்மிருதியாக ஸங் கிரஹம் செய்தாரென்ற விஷயம் எதனால் ஏற்பட்டது? மனுஸ்மி ருதியென்பது ஸ்மிருதியல்லவா? இதிஹாஸமில்லையே? ஓரிடத் திலும் ஸ்மிருதிகளை இதிஹாஸமாகச் சொல்லவில்லையே? இதி ஹாஸத்தைப்போல் ஸ்மிருதிகள் தர்மாதர்மங்களைச் சரித்திரவாயி லாகப் போதிப்பதில்லையே? ஸ்மிருதிகள் வேதார்த்தஸங்கிரஹ ரூபங்கள் என்றல்லவா உலகப்பிரஸித்தம். "ச்ருதியை ஸ்மிருதி அனுஸரித்துச் செல்வதுபோல் நந்தினியை ஸுதக்ஷிணை என்பவ வள் அனுஸரித்துச்சென்றாள்" என்று ரகுவம்சகாவ்யத்திலும் இவ்விஷயம் பிரஸித்தமன்றோ? மனுஸ்மிருதியின் ஆரம்பத்திலும் இவ்விஷயம் ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது. அதாவது "மனு வானவர் எவரெவர்களுக்கு எதை தர்மமாகக்கட்டளையிட்டாரோ, அதை வேதத்திலிருப்பதாகவே அறியவேண்டும். வேதங்களின் தத்வார்த்தத்தையறிவதற்கு ஸர்வக்ஞாயிருக்கும் மனுவுக்குத் தான் ஸாமர்த்தியம். வேதங்களில் பிராமாண்யபுத்தியுடன் தர்ம சாஸ்திரங்களை நியாயபூர்வகமாக விசாரம்செய்து தர்மங்களை

அநுஷ்டிக்கவேண்டும்" என்றல்லவா இவர் கூறியிருக்கின்றார். இவ்விதம் 'வேதவிஹிதமாயிருக்கும் தர்மங்களையே நான் வெளியிடுகிறேன்' என்று பிரதிக்ஞாபூர்வகமாகப் பிரவர்த்தித்திருக்கும் மனுஸ்மிருதியை அக்காலத்திய ஜனாசாரஸங்கிரஹரூபம் என்று இவர்களுக்கு உபதேசம் செய்தது யாரோ தெரியவில்லை. வேத மூலமாக வெளியாகும் தர்மாதர்மம், அதன் பிரயோஜனம், அதன் அதிகாரி இவைமுதலிய விஷயங்களை நிரூபணம்செய்யும்பொருட்டு மனு முதலிய மஹரிஷிகள் ஸ்மிருதிகளை ஆரம்பித்தார்களேயன்றி அவரவர்கள் காலத்து ஆசாரானுஷ்டானப் பிரகாரத்தை நிரூபணம் செய்யும்பொருட்டல்ல. தர்மாதர்மங்களை வேதப்பிரமாணத்தால்தான் அறியவேண்டுமே ஒழிய ஆசாரத்தாலல்ல. வைதிகதர்மாதர்மங்களை பிரத்யக்ஷமூலமாக ஏற்பட்ட லௌகிகாசாரத்தால் அறிவது ஸாத்தியமில்லை. வேதமும், ஸ்மிருதிகளுந்தான் தர்மாதர்மங்களுக்குப் பிரமாணமென்று மனுவும் விஸ்தாரமாகத் தெரிவித்திருக்கின்றார். ஆகையால் ஸ்மிருதிகளை ஜனாசாரஸங்கிரஹரூபங்களாக எடுத்துரைப்பதும், அவற்றால் ரிஷிகளுக்குள் காலவித்தியாஸத்தைக் கல்பனைசெய்வதும், அதனால் ஏகவாக்யதை ஸ்மிருதிகளுக்கு ஸம்பவிக்கமுடியாதென்பதும், இக்காரணத்தால் காலத்தில் விவாஹம் செய்யாமலிருப்பவர்களுக்குத் தோஷமதிகமாதொன்றுமில்லையென்பதும் அறிவில்லாமையாலேயேதான் என்பது நிச்சயம்.

இனி "ஸ்மிருதிகளுக்குள் அர்த்தபேதமதிகங் காணப்படுவதால் ஏகவாக்யதை ஸம்பவிக்கமுடியாது" என்ற இரண்டாவது காரணத்தை விசாரிப்பாம்.

ஸ்மிருதிகளுக்குள் அர்த்தம் அதிக பேதப்படுவதால் அவைகளுக்கு ஏகவாக்யதை ஏற்படமுடியாதென்று இவர்கள் சொல்வதும் ஸரியல்ல. ஏனென்றால் ஒரே வேதத்திற்கு அர்த்தவிவரணம் செய்யும்பொருட்டு பிரவர்த்தித்திருக்கும் ஸ்மிருதிகளுக்குள் அர்த்தபேதம் எப்படி ஏற்படமுடியும்? அபௌருஷேயமென்றும் நித்தியஸித்தமென்றும் புகழடைந்து விளங்கும் வேதத்தை தபோவிசேஷத்தாலும் ஈசுவரானுக்ரஹத்தாலும் வைதிகஸநாதந தர்மாதர்மங்களுக்கு மூலப்பிரமாணமாக அறிந்துகொண்டு அதன் மூலமாக வெளியாகும். அர்த்தவிசேஷத்தையல்லவா நமது மக

ரிஷிகள் ஸ்மிருதிக்ரந்தங்களில் நிரூபித்திருக்கின்றார்கள். வேதார்த்தம் என்பது ஒன்றுதானன்றோ? மனுகாலத்தில் வேதார்த்தம் ஒருவிதம், யாக்ஞவல்க்யர்காலத்தில் மற்றொருவிதம், அதற்குப் பின் வேறொருவிதமென்று வேதார்த்தம் காலபேதத்தால் வெவ்வேறாக மாறிவிடுவதில்லையல்லவா? ஸர்வதேசங்களிலும் ஸர்வ காலங்களிலும் ஸர்வஜனங்களிடத்திலும் அசைவற்ற பர்வதம் போல் நித்யமாகவும் ஒரே விதமாகவும் பிரகாசிக்கும் தர்மாதர்மம் என்னும் அர்த்தத்தையல்லவா வேதார்த்தமாகச் சொல்லவேண்டும். ஒரு வாக்கியத்திற்கு ஒன்றுதான் அர்த்தமாகும் என்ற நியாயப்பிரகாரமாக ஒரே வேதவாக்யஸமுதாயத்துக்கும் ஒரே அர்த்தந்தான் சொல்லவேண்டும். அர்த்தபேதம் ஒரே வாக்கியத்தில் சொல்வதற்கு புத்திபேதம்தான் மூலகாரணமாகும். புத்திபேதமில்லாமல் போனால், வாக்கியார்த்தபேதம் ஏற்படுவதற்குநியாயமில்லையல்லவா? இவ்விதபுத்திபேதமும் ஸ்மிருதிக்கிரந்தங்களை இயற்றியதயாநிதிகளாகிய மஹரிஷிகளிடம் இருப்பதாக, ஹீன புத்தியுள்ள நாம் புத்திபலத்தைமாத்திரம் அவலம்பித்துக்கொண்டு கல்பனம் செய்துவிடுவது ஸாஹஸகாரியமன்றோ? ஸ்மிருதிக்கிரந்தங்களும், ஒரே விதமாயிருக்கும் ஒரே அர்த்தவிசேஷத்தையே தான் பிரதிபாதிக்கின்றன. அவைகளுக்குள்ளும் அர்த்தபேதம் என்பது சிறிதுமில்லை. ஸ்மிருதிகள் நித்தியமாகவிருக்கும் வேதார்த்தத்தை வெளியிடுகின்றனவேயன்றி புத்திதோஷத்தால் வேதார்த்தமாக நினைத்துக்கொண்டு அவரவர்களபிப்பிராயப்படிக்கெல்லாம் அனுஷ்டிக்கப்பட்டுவரும் தர்மாபாஸங்களை வெளியிடுவதற்கில்லை. விபரீத வேதார்த்தத்தை நன்கு கற்றுணராமல் விபரீதக்ஞானமுள்ள மூடஜனங்கள் துர்வாஸனாநுஸாரமாக தம்மிஷ்டப்பிரகாரமாக உண்மையில் தர்மமாகவிருக்கும் காரியங்களை அதர்மமென்று விலக்கியும், உண்மையில் நிஷித்தமாயிருக்கும் காரியங்களை தர்மகாரியமென்று சிரத்தையுடன் அனுஷ்டித்துக்கொண்டும் வரலாமன்றோ. ஆகவே முற்காலத்து ஆசாரமெல்லாம் தர்மாதர்மரூபமென்று எப்படிச்சொல்லமுடியும்? ஸ்மிருதிகளும் அத்தகைய துராசாரத்தையே வெளியிடுகின்றனவென்றும் எப்படி சங்கதமாகும். ஆதலினால் தர்மாதர்ம வியவஸ்தை அடியோடு அழிந்துவிடும். அன்றியும் அனுஷ்டானப் பிரகாரமும்

காலபேதத்தால் மாறுதலையடையமுடியாது. லௌகிக வைதிக காரியங்களெல்லாவற்றையுமே ஒரே விதமாகவும், கிரமந்தவாமலும், நன்றாய் அநுஷ்டிக்கும்பக்ஷத்தில்தான் அவை பயன்படும். அதிலும் வீடு, மாடி, தோட்டம், படுக்கை, ஆசனம், ஆபரணம், முதலிய வஸ்துக்களை உபயோகத்தில் வைத்துக்கொள்ளும் லௌகிக காரியங்களில் கொஞ்சம் உபயோகம் செய்துகொள்ளும் பிரகாரம் காலவிசேஷத்தில் மாறிக்கொண்டுவந்தாலும், அவைகளை அனேகவிதமாக அநுஷ்டானத்தில் அமர்த்திக்கொண்டாலும், அதன் பிரயோஜனம் அடியோடு அழிந்துவிடாது. வைதிககாரியங்களை ஒரே விதமாகவும், ஒழுங்காகவும், குறைவில்லாமல் அநுஷ்டித்தால் தான் பிரயோஜனம் ஏற்படும். இன்றேல் ஏற்படுவதில்லை. ஆதலால் ஸ்மிருதிகளும் வேதார்த்தமாயிருக்கும் தர்மாதர்மங்களை ஒரே விதமாகவே அறிவிக்கின்றன. காலபேதத்தாலும் புருஷபுத்தி தோஷத்தாலும் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும் தர்மங்களை மாறுதல்களை அறிவிப்பதில்லை. ஆனல் சில இடங்களில் சிலமஹான்கள் தர்மாதிக்ரமணமென்னும் ஸாஹஸத்தையும், அநுஷ்டித்ததாகவும், அத்தகைய ஸாஹஸத்தை அநுஷ்டிக்கும் அவர்களுக்கு தபோமஹிமையால் தோஷம் யாதொன்றும் இல்லையென்றும், அத்தகைய ஸாஹஸத்தைநாமநுஷ்டிக்கும் பக்ஷத்தில் நாகந்தான் ஏற்படுமென்றும் தர்மத்தைமாற்றுவதில் ஜாக்கிரதையாக இருப்பதற்காக தர்மவிப்லவமும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனுலும், ஸ்மிருதிகளுக்கு தர்மவிப்லவத்தில் தாத்பர்யமில்லையென்பது ஸித்தம். ஆகையால் ஸ்மிருதிகளில் அர்த்தபேதத்தைக் கூறுவது அறியாமையாலேயேதான் என்றறிக.

அன்றியும் விஹிதகாலத்தில் கன்யாதானம் செய்யாமலிருக்கும் பெற்றோர்களுக்குத் தோஷத்தை அறிவிக்கும் பிரகிருதஸ்மிருதி வசனங்களிலும் அர்த்தபேதமிருப்பதாக நினைப்பதற்கு இடமில்லை. ஏனென்றல் தாய் தந்தைகளின் சிராத்தத்தைச் செய்யாமலிருக்கும் ஒருவருக்குத் தோஷமுள்ளவனென்றெருவரும், தமதுகடைமையைச்செய்யாதவரென்றுமற்றெருவரும், தாய்தந்தைகளுக்கு சிராத்தம் செய்யாதவனென்று வேறெருவரும்வெவ்வேறு விதமாக தோஷத்தை அறிவிப்பார்களேயானல் அவர்களுக்கு அபிப்பிராயபேதம்ஏற்பட்டுவிட்டதெென எவ்விதம் சொல்ல

முடியும். தாய் தந்தைகளின் சிராத்தத்தைச்செய்யாமலிருப்பவர்கள் தோஷமுள்ளவர்களென்றஅபிப்பிராயம் யாவருக்கும்சமானமன்றோ. அதுபோல் விஹிதகாலத்தில் கன்யாதானம் செய்துகொடுக்காமலிருப்பவர்களுக்கும் நிந்திக்கக்கூடியவனென்று மனுமஹரிஷியும், தோஷமுள்ளவனென்றுவஸிஷ்டமஹரிஷியும்,ப்ரூணஹத்தி என்னும் மஹாபாபத்தைச்செய்தவனென்று யாக்யவல்க்யமஹரிஷியும், தோஷத்தை எடுத்துரைப்பார்களானால், அவர்களுக்கு அபிப்பிராயவிரோதம் ஏற்பட்டுவிட்டதாக எங்ஙனம் சொல்லமுடியும்? காலத்தில் கன்யாதானம் செய்யாதவர்களுக்கு தோஷம் உண்டென்ற அம்சம் யாவருக்கும் இஷ்டமன்றோ?

அன்றியும் விசேஷமில்லாமல் ஸாமான்யமில்லை, ஸாமான்யமில்லாமலும் விசேஷமில்லையாதலால் ஸாமான்யம் விசேஷத்தையும், விசேஷம் ஸாமான்யத்தையும் பரஸ்பரம்அபேக்ஷித்துக்கொண்டிருக்கும். அவ்வபேக்ஷையையனுஸரித்து அச்சாமான்யவிசேஷங்களுக்கு ஏகவாக்யதைமூலமாக ஒரே அர்த்தந்தான் நியாயஸித்தமாகும். தோஷஸாமான்யத்தையறிவிக்கும் மனுஸ்மிருதிவசனத்திற்கு தோஷவிசேஷமாகிய விசேஷார்த்தத்தில் அபேக்ஷையிருப்பதால் அர்த்தவிசேஷத்தில் தாத்பர்யமென்பது அவசியமேயாகும். தோஷவிசேஷத்தை அறிந்துகொள்ளாமல் தோஷஸாமான்யத்தைத் தெரிந்துகொள்வதால்மட்டிலும் தோஷத்தைவிலக்கிக்கொள்வதில் ஆவலுள்ள ஆஸ்திகர்களுக்கு பிராயச்சித்தம்முதலியவைகளால் தோஷநிவர்த்தி ஏற்படமாட்டாதல்லவா? தோஷமெவ்விதமென்று விசேஷரூபமாக அறியாமலிருந்தால் சாஸ்திரமூலமாக அதற்குரிய பிராயச்சித்தத்தையும் விசேஷரூபமாக நிச்சயித்துக்கொள்வது ஸாத்தியமில்லை. ஆகவே பிராயச்சித்த விசேஷத்தையறிந்துகொள்வதற்காகவும் தோஷஸாமான்யத்தையறிவிக்கும் மனுஸ்மிருதிவசனத்திற்கு அர்த்தவிசேஷத்தில் பர்யவாஸனம் சொல்லவேண்டும். இதற்காகவே சில ஸ்மிருதிகளில் தாமே தோஷஸாமான்யத்தையும் பின்பு நிரூபித்துவிடுவதுஉண்டு. வஸிஷ்டஸ்மிருதியில் அவ்வாறே தோஷஸாமான்யத்தைவிவாஹகாலாதிக்ரமணம் செய்பவர்களுக்கு ஸாமான்யமாகவிதித்துவிட்டுப் பிறகு தாமே தமது ஸ்மிருதியிலேயே அந்ததோஷம்ப்ரூணஹத்திரூபமாகுமென்று அதன் விசேஷஸ்வரூபமும்

நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதம் தோஷஸாமான்யத்தை யும் பின்பு தோஷவிசேஷத்தையும் தெரிவிக்கும் ஸ்மிருதிகளுக்கு தோஷவிசேஷத்தில் தாத்பர்யமென்பது நிர்விவாதமாதலால் தோஷஸாமான்யத்தைமட்டிலும் அறிவித்து தோஷவிசேஷத்தை யறிவிக்காமலிருக்கும். மனுஸ்மிருதிவசனம்போன்ற வசனங்க ளுக்கும் தோஷவிசேஷத்தைமட்டிலும்அறிவிக்கும் ஸ்மிருதிவச னங்களுடன் ஏகவாக்யதை செய்துகொண்டு தோஷவிசேஷமெ ன்ற ஒரே அர்த்தத்திலேயேதான் தாத்பர்யங்கூறவேண்டும்.பூர்வ மீமாம்ஸாதர்சனக்காராகிய ஜைமினிபகவானும்ஸாமான்ய விசேஷ ரூபமாயிருக்கும் வசனங்களுக்குள் விசேஷசாஸ்திரத்தை அனுஸரி த்துஸாமான்யசாஸ்திரத்திற்கு அர்த்தம்சொல்லவேண்டுமென்றும் ஸாமான்யசாஸ்திரத்திற்கு விஷேச சாஸ்திரார்த்தத்திலேயேதான் தாத்பர்யமென்றும், ''अर्थैकत्वादेक'' என்ற அதிகாணத்தில் ஸித்தாந் தம்செய்திருக்கின்றார். இவ்வதிகாணஸித்தாந்தத்தையே''சாகபசு நியாயம்''என்றும் சொல்வதுண்டு. அதாவது யாகத்தில் பசுவபா ஹோமத்தை சிலசுருதிகள்விதிக்கின்றன. பசுவென்றால் நால்கால் ஜந்து வெல்லாமாகும். அத்தகைய பிராணிகளுக்குள் எதைக் கொண்டு ஹோமம்செய்யவேண்டுமென்றுதெரிந்து கொள்வதற்கு ஆகாங்க்ஷை ஏற்பட்டவுடன் விசேஷ சுருதிவசனமானது சாக (ஆட்டினுடைய)வபாஹோமம் யாகத்தில் செய்யவேண்டுமென்று விசேஷித்தும் விதித்தது. இவ்வசனங்களுக்கு மீமாம்ஸாநியாயப் பிரகாரமாக ஏற்படும் ஏகவாக்யதையைத்தான் ''சாகபசுநியாயம்'' என்பது வழக்கம். ஆகையால் ஸ்மிருதிகளுக்கு அர்த்தபேதம் இருப்பதாக ஆபாஸகாரணங்களால் ஆரோபணம் பண்ணிக் கொண்டு காலத்தில் கன்யாதானம் செய்துகொடுக்காமலிருப்பவர் கள்விஷயத்தில் மனுமகரிஷிக்கு அபிப்பிராயம் வேறு, யாக்ஞ வல்க்யர் முதலிய மற்ற மகரிஷிகளுக்கு மற்றொருவிதம் அபிப் பிராயம், மனு கூறுவதுதான் உண்மை, மற்றவர்கள் அதிக மதிமயக்கமுள்ளவர்களாகையால் அவர்கள் கூறுவது உண்மை யல்லவென்றிவ்வாறு தோன்றின்படிக்கெல்லாம் துரபிப்பிராயத் தைக் கல்பனம் பண்ணுவது சாஸ்திரார்த்தக்ஞானமற்ற மூடர் களுக்கு அழகேயொழிய பதவாக்கியப்பிரமாணங்களைக் கற்று ணர்ந்த பண்டிதர்களுக்கு அழகல்ல. எப்படியிருந்தாலும் விஹித

காலத்தில் கன்யாதானம் செய்யாமலிருப்பவர்களுக்கு தோஷம் உண்டென்ற அபிப்பிராயம் எல்லா ஸ்மிருதிகளுக்கும் ஸமானந்தானென்ற விஷயத்தைப் பாமரர்களும் மறுத்துவிடமுடியாது. விஹிதகாலத்தில் கன்யாதானம் செய்யாதவர்களுக்குத் தோஷம் உண்டென்பதுமட்டிலுமே ஸ்திரீகளுக்கு விவாஹம் நித்தியமென்பதற்குத் தகுந்த பிரமாணம். கன்யாவிவாஹம் காம்யமாகவிருக்கும்பக்ஷத்தில் "அதைச் செய்யாவிட்டால் தோஷமுண்டு" என்ற தோஷமுண்டெனக்கூறுவது பொருத்தமுடையாததன்றோ? சாஸ்திரங்களில் காம்யமாக விதிக்கப்பட்டிருக்கும் கர்மாக்களையனுஷ்டிக்காமலிருப்பவர்களுக்கு எங்கேயாவது தோஷமுண்டென்று விதிக்கப்பட்டிருக்கின்றதா? செய்யாவிட்டால் தோஷத்தை விதிக்கும் வசனம் கர்மா நித்யமென்பதற்கல்லவா பிரமாணம். ஆகையால் தோஷஸ்மிருதிவசனங்களைக்கொண்டு விவாஹம் ஸ்திரீகளுக்கு நித்யமென்றுதான் ஏற்படும்.

அன்றியும் இவ்விஷயத்தில் இவ்வசனங்களுக்கு தத்வார்த்தமிதுவாகும். அதாவது 'காலத்தில் கன்யாதானம் செய்யாதவர்களுக்குத் தோஷமுண்டு" என்று தோஷஸாமான்யத்தையறிவிக்கும் மனுஸ்மிருதிவசனத்திற்கு "ஸ்திரீவிவாஹத்திற்கு முக்கியகாலமாக விஹிதமாயிருக்கும் எட்டாவது வயது" என்ற முக்கியகாலத்தைத்தவறிவிடும்பக்ஷத்தில் தோஷஸாமான்யமுண்டென்று தாத்பர்யமறியவேண்டும். காலத்தில் கன்யாதானம் செய்துகொடுக்காமலிருப்பவர்களுக்கு ப்ரூணஹத்தி என்னும் தோஷவிசேஷத்தைத் தெரிவிக்கும் யாக்ஞவல்க்யஸ்மிருதி முதலியவைகளுக்கு "ஸ்திரீவிவாஹத்திற்கு கௌணகாலமாக விதிக்கப்பட்டிருக்கும் எட்டாவ்து வயதுக்குமேல் ருதுவுக்குமுந்தினகாலமாகிய கௌணகாலத்தையும் தவறிவிடும்பக்ஷத்தில் 'ப்ரூணஹத்தி' என்னும் மகாதோஷம் ஏற்படுமென்ற அர்த்தத்தில் தாத்பர்யம் கொள்ளல் வேண்டும். இவ்விதமாக விஷயவிபாகம் செய்துகொண்டு இவைகளுக்கு ஸமரஸமாகத் தாத்பர்யமுரைப்பதுதான் தோஷமற்ற சாஸ்திரார்த்தமாகும்.

விஹிதகாலத்தில் கன்யாதானம் செய்துகொடுக்காமலிருப்பவர்களுக்கு ஸ்மிருதிகளில் தோஷம் விதிக்கப்படுவதுபோல் விவாஹம் செய்விக்கவேண்டியவர்களாகவிருக்கும் கன்யகை